# பொ.து.ந.க.எண். இ5/19110/2021

**தீர்மானஎண். 794/2021** **நாள்:20-10-2021**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - திரு.S.ஜெயகுமார், நிர்வாக அலுவலர், மண்டலம்-8 அவர்கள் 20.10.2021 அன்று பிற்பகல் முதல் தன் விருப்ப ஓய்வில் செல்வதற்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 8ல் நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வரும் திரு.S.ஜெயகுமார் (பணி எண்.101602) அவர்கள் தன்னுடைய மனைவியின் உடல்நிலை சரியில்லாத காரணத்தினாலும் மற்றும் தன் குடும்ப சூழ்நிலை காரணமாகவும், தன்னால் தொடர்ந்து பணிக்கு வர முடியவில்லை என்றும், தன்னை தன்விருப்ப ஓய்வில் செல்ல அனுமதிக்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி, சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களிடம் 23.07.2021 நாளிட்ட கடிதம் அளித்துள்ளார்.

திரு.S. ஜெயகுமார், நிர்வாக அலுவலர் அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியில் கருணை அடிப்படையில் கிளரிக்கல் அட்டெண்டராக 10.08.1984 அன்று பணியில் சேர்ந்துள்ளார். மேற்படி தனியருக்கு கிளரிக்கல் அட்டெண்டர் பதவியில் 10.08.1984 அன்று பணிவரன்முறை செய்யப்பட்டு 10.09.1986 அன்று தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. தனியர் 04.04.1988 அன்று தட்டச்சராகவும், 25.06.1997 அன்று உதவியாளராகவும், அதனைத் தொடர்ந்து 09.10.2009 முதல் கண்காணிப்பாளராகவும், பின்பு 10.07.2018 முதல் நிர்வாக அலுவலராக பதவி உயர்வு பெற்று தற்போது மண்டலம் 8ல் பணிபுரிந்து வருகிறார். மேற்படி தனியருக்கு நிர்வாக அலுவலர் பதவியில் 10.07.2018 அன்று பணிவரன்முறைபடுத்தப்பட்டுள்ளது. தனியரின் பணிவிவரங்கள் கீழ்வருமாறு அளிக்கப்படுகிறது.

| வ. எண். | திரு.S.ஜெயகுமார், நிர்வாக அலுவலர் அவர்களின் பணி விவரங்கள் | | | |
|---|---|---|---|---|
| 1 | பிறந்த தேதி | 05.01.1967 | | |
| 2 | தனியர் முதன் முதலில் பணியில் சேர்ந்த பதவி மற்றும் நாள் | கருணை அடிப்படை நியமனம் - கிளரிக்கல் அட்டெண்டர்<br>நாள் : 10.08.1984 | | |
| 3 | தனியர் பணிபுரிந்த துறைகள் மற்றும் பணிபுரிந்த காலம் | 10.08.1984 முதல் 04.04.1988 வரை | கிளரிக்கல் அட்டெண்டர் | இயந்திரப் பொறியியல் துறை |
| | | 05.04.1988 முதல் 07.06.1988 வரை | தட்டச்சர் | மின்துறை |
| | | 08.06.1988 முதல் 05.06.1995 வரை | தட்டச்சர் | பொதுத்துறை |
| | | 06.06.1995 முதல் 24.06.1997 வரை | தட்டச்சர் | கட்டடத்துறை |
| | | 25.06.1997 முதல் 08.10.2009 வரை | உதவியாளர் | மத்திய கணக்கு குழுமம் |
| | | 09.10.2009 முதல் 17.01.2017 வரை | கண்காணிப் பாளர் | |
| | | 18.01.2017 முதல் 09.07.2018 வரை | கண்காணிப் பாளர் | மக்கள் தொடர்பு அலுவலகம் |
| | | 10.07.2018 முதல் இதுநாள் வரை | நிர்வாக அலுவலர் | மண்டலம் - 8 |

**பொ.து.ந.க.எண். இ5/19110/2021**

| | | |
|---|---|---|
| 4 | தனியர் பெற்ற பதவி உயர்வுகள் மற்றும் பணியில் சேர்ந்த நாள் | தட்டச்சர் - 04.04.1988<br>உதவியாளர் - 25.06.1997<br>கண்காணிப்பாளர் - 09.10.2009<br>நிர்வாக அலுவலர் - 10.07.2018 |
| 5 | தனியர் தன் விருப்ப ஓய்வு கடிதத்தினை சிறப்பு அதிகாரி, மன்றம் அவர்களுக்கு அளித்த நாள் | 23.07.2021 |
| 6 | தன் விருப்ப ஓய்வு பெறும் நாள் | 20.10.2021 பிற்பகல் முதல் |
| 7 | தன் விருப்ப ஓய்வுக்கு விண்ணப்பித்த அன்று தனியரின் வயது | 54 வருடங்கள்<br>6 மாதங்கள் |
| 8 | தனியர் பணி நிறைவு செய்த ஆண்டுகள் | 37 வருடங்கள் |
| 9 | தனியர் உள்ளபடியாக ஓய்வு பெறும் நாள் மற்றும் வருடம் | அரசாணை நிலை எண். 51, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (எஸ்) துறை நாள் - 07.05.2020ன்படி 31.01.2027. |

தனியர் பணிபுரிந்த துறைகள் / மண்டல அலுவலகங்களிலிருந்து தனியர் மீது தணிக்கைத் தடைகள், முன்பண தீர்வு செய்தல் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் மற்றும் நீதிமன்ற வழக்குகள் ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவித்து இன்மை அறிக்கைகள் பெறப்பட்டுள்ளது.

நிர்வாக இயக்குநர், சென்னை மாநகராட்சி அலுவலர்கள் கூட்டுறவு சங்கம் அவர்களின் 19.08.2021 நாளிட்ட கடிதத்தில், தனியர் சென்னை மாநகராட்சி கூட்டுறவு சங்கத்தின் உறுப்பினர் எனவும், கடன் நிலுவைத் தொகை ஏதுமில்லை எனவும், சான்றளிக்கப்பட்டுள்ளது. மேலும், உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறையிலிருந்து தணிக்கை சான்று ஏதும் பெறப்படவில்லை.

பெருநகர சென்னை மாநகராட்சி காவல்துறை துணை கண்காணிப்பாளர் / விழிப்பு அலுவலர் அவர்களின்25.08.2021 நாளிட்ட கடிதத்தில் திரு.S.ஜெயகுமார், நிர்வாக அலுவலர், (பணி எண்.101602) மண்டலம்-8 அவர்கள் மீது பெருநகர சென்னை மாநகராட்சி, விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இயக்குநர், விழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு துறை 16.09.2021 நாளிட்ட கடிதத்தில் திரு.S.ஜெயகுமார், நிர்வாக அலுவலர், மண்டலம் 8 அவர்கள் மீது *As on date, no enquiry or investigation is pending against the official* என சான்று பெறப்பட்டுள்ளது.

மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலர் 8 அவர்களின் 8.10.2021 நாளிட்ட கடிதத்தில் திரு.S.ஜெயகுமார், நிர்வாக அலுவலர், மண்டலம் 8 அவர்கள் தன்விருப்ப ஓய்வு அளிக்க கோரி 90 நாட்கள் முன்னறிவிப்புடன் 23.07.2021 நாளிட்ட கடிதத்தினை சிறப்பு அதிகாரி,மன்றம் அவர்களுக்கு அளித்துள்ளதன் அடிப்படையில் தனியர் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை, நிதி இழப்பீடு, தணிக்கைத்தடை மற்றும் நீண்ட கால முன்பணம் சரிசெய்யப்படாமல் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின் அதனை தனியரது பணிக்கொடை தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு 20.10.2021 அன்று பிற்பகல் முதல் தனியரை தன்விருப்ப ஓய்வில் செல்ல மத்திய வட்டார துணை ஆணையர் அனுமதி வழங்கியதை தொடர்ந்து மேற்படி தனியரை தன்விருப்ப ஓய்வில் செல்ல அனுமதிக்குமாறு சிறப்பு அதிகாரி, மன்றம் அவர்களின் ஆணை வேண்டி கடிதம் பெறப்பட்டுள்ளது.

மேலும் திரு.S.ஜெயகுமார், நிர்வாக அலுவலர், மண்டலம்-8 அவர்கள் தன் விருப்ப ஓய்வில் செல்ல கடிதம் அளித்த பிறகு எவ்விதமான ஊதியமில்லா விடுப்பும் துய்க்கவில்லை என்றும், தனியர் தன் விருப்ப ஓய்வு வேண்டி மனு அளித்த நாளிலிருந்து 90 நாட்கள் நிறைவடையும் நாளான 20.10.2021 அன்று பிற்பகல் முதல் தன் விருப்ப ஓய்வில் செல்ல தகுதி உடையவராகிறார்.

**பொ.து.ந.க.எண். இ5/19110/2021**

அரசாணை எண்.376 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறை, நாள்-11.12.1995-ன்படி, திரு.S.ஜெயகுமார், நிர்வாக அலுவலர், மண்டலம்-8 அவர்கள் 37 வருடங்கள் பணிக்காலம் நிறைவு செய்து 54 வயதை கடந்துள்ளதாலும், தன் விருப்ப ஓய்வு அளிக்க கோரி 90 நாட்கள் முன்னறிவிப்பு கடிதம் சிறப்புஅதிகாரி(மன்றம்) அவர்களிடம் அளித்துள்ளதால், சிறப்புஅதிகாரி(மன்றம்) அவர்களின் அனுமதிக்குட்பட்டு திரு.S.ஜெயகுமார், நிர்வாக அலுவலர், மண்டலம் 8 அவர்களை தன்விருப்ப ஓய்வில் (Voluntary Retirement) செல்ல அனுமதிக்கலாம் என பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

எனவே, திரு.S.ஜெயகுமார், நிர்வாக அலுவலர், மண்டலம்-8 அவர்கள் தன்விருப்ப ஓய்வு (Voluntary Retirement) அளிக்க கோரி 90 நாட்கள் முன்னறிவிப்புடன் 23.07.2021 நாளிட்ட கடிதத்தினை சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களிடம் சமர்ப்பித்துள்ளதன் அடிப்படையில், தனியர் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை, நிதி இழப்பீடு, தணிக்கைத் தடை மற்றும் நீண்ட கால முன்பணம் சரி செய்யப்படாமல் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின் அதனை தனியரது பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படி தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு 20.10.2021 அன்று பிற்பகல் முதல் தனியரை தன்விருப்ப ஓய்வில் (Voluntary Retirement) செல்ல அனுமதிக்க சிறப்புஅதிகாரி-மன்றம் அவர்களின் அனுமதி கோரிய, முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 15.10.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"தன்விருப்ப ஓய்வில் செல்ல, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**தி.க.மே.ந.க.எண்.அ7/2518/2021**

**தீர்மான எண். 795/2021** **நாள்:25-10-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - ஒப்பம் - 2020-2021 - திடக்கழிவு மேலாண்மை துறை - பெருநகர சென்னை மாநகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் குறித்த விழிப்புணர்வு பொதுமக்களிடம் ஏற்படுத்த 200 எண்ணிக்கை பரப்புரையாளர்கள், 15 எண்ணிக்கை மண்டல மேற்பார்வையாளர்கள் நியமிக்கும் பணிக்கு - குறைந்த ஒப்பப்புள்ளி அளித்த M/s.Janishree Corporate Services Private Limited அவர்களுக்கு ஒப்பம் வழங்க அனுமதி.**

அரசாணை (நிலை)எண் 37, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.IV).துறை, நாள்.13.04.2017ன்படி தமிழகத்தில் உள்ள அனைத்து உள்ளாட்சி அமைப்புகளிலும் திறந்தவெளி மலம் கழித்தலை தடுக்கவும், திடக்கழிவுகளை மறுசுழற்சிசெய்தல் ஆகியவை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த பரப்புரையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் அந்தந்த மாநகராட்சி பகுதியை சார்ந்தவர்களை / மகளிர் சுய உதவி குழுக்களை பயன்படுத்தி கொள்ள மாநகராட்சி ஆணையர்களுக்கு அனுமதி அளித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

திட்ட இயக்குநர், தூய்மை இந்தியா திட்டம் / நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 06.07.2021 நாளிட்ட கடிதத்தில் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(1) Permission was accorded to continue the same service of contract till the selection of outsourcing agency for engaging animators, supervisors and co-ordinators.

(2) The tender should be floated to engage the outsourcing agency for the 16.07.2021 to 15.01.2022 or till the launch of SBM 2.0.

(3) The remuneration cost including prevailing EPF and ESI per month is fixed by the committee to animators, supervisors and co-ordinators should be directly paid to them by the selected outsourcing agency.

(4) The service charges for the supply of animators, supervisors and co-ordinators should be quoted by the outsourcing agency.

சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண்.660/2021, நாள்.18.08.2021ன் படி, பெருநகர சென்னை மாநகராட்சி 200 எண்ணிக்கையிலான பரப்புரையாளர்கள் (Animators) மற்றும் 15 எண்ணிக்கையிலான மேற்பார்வையாளர்கள் (Supervisors) ஒப்பந்ததாரர்கள் மூலம் ஆறு மாத காலத்திற்கு பணியமர்த்த ரூ.2,11,65,000/- க்கு கீழ்கண்ட விவரப்படி மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

| Category | No of persons | Base rate fixed by committee as per TWAD SOR 2020-21 | ESI @3.25% by Employer (in Rs ) | EPF @8.33% by Employer (in Rs ) | Remuneration cost per day (in Rs ) | Remuneration cost per Month (in Rs ) | Add 2 % TDS (in Rs ) | Add service charges 10 %(shall not exceed more than 10% of column 7) | Total cost per month for a person | Gross Budget for six months (In Rs.) | Remuneration cost per six Month for total strength (In Rs) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** | **6** | **7** | **8** | **9** | **10** | **11** | **12** |
| Animator | 200 | 426 | 13.85 | 35.49 | 475.33 | 14259.92 | 285.20 | 1425.99 | 15971.11 | 96,000 | 1,92,00,000 |
| Supervisor | 15 | 584 | 18.98 | 48.65 | 651.63 | 19548.82 | 390.98 | 1954.88 | 21894.67 | 1,31,0000 | 19,65,000 |
| **Total** | | | | | | | | | | | **2,11,65,000** |

**தி.க.மே.ந.க.எண்.அ7/2518/2021**

01. பணியின் விவரம்:-

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | பெருநகர சென்னை மாநகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் குறித்த விழிப்புணர்வு பொதுமக்களிடம் ஏற்படுத்த 200 எண்ணிக்கை பரப்புரையாளர்கள், 15 எண்ணிக்கை மண்டல மேற்பார்வையாளர்கள் நியமித்தல் | 2,11,65,000/- |

| | | | |
|---|---|---|---|
| 02. | மதிப்பீட்டு தொகை நிர்வாக அனுமதி. மற்றும் நாள் | : | 1. திட்ட இயக்குநர், தூய்மை இந்தியா திட்டம் / நகராட்சி நிர்வாக ஆணையர் கடிதம், ந.க.எண்.26458/2016/P1, நாள்.06.07.2021<br>2. சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண்.660/2021, நாள்.18.08.2021 |
| 03. | திட்ட குறியீட்டு எண் | : | பொருந்தாது |
| 04. | ஒப்புதல் பெற்ற மதிப்பீட்டின் தொகை | : | ரூ.211.65 இலட்சங்கள் |
| 05. | எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள் | | 1. சென்னை மாநகராட்சி செய்தி மலர், 19.08.2021 மற்றும் 26.08.2021.<br>2. மாநில செய்தி மலர், 26.08.2021.<br>3. The Hindu Newspaper, நாள்.20.08.2021.<br>4. தினகரன் நாளிதழ், 20.08.2021. |
| 06. | ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள் | | 08.09.2021 |
| 07. | ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்க அளிக்கப்பட்ட நாள்: | | 18/08/2021 |
| 08. | எத்தனை மின்னணு ஒப்பங்கள் பெறப்பட்டன? | | ஆறு ஒப்பங்கள் பெறப்பட்டன |

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு e-tender மூலமாக ஆறு ஒப்பங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது தொழில்நுட்ப ஆவணங்கள் (Technical Bid) 08.09.2021 அன்று திறக்கப்பட்டு ஒப்பமுன்தகுதி நிபந்தனைகள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் மூன்று ஒப்பங்கள் (1) M/s.Falcon Security services Private Limited, (2) M/s.A1 Security Services and A1 Facility Services மற்றும் (3) M/s.Y115 Puliyoorsalai Labour Co-operative Society நிறுவனம் முன்வைப்பு கட்டணம் மற்றும் பயன்பாட்டு கட்டணம் வரைவோலை RTGS மூலம் செலுத்தாத காரணத்தினால் ஒப்பம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மேலும், (4) M/s.Reward Society மற்றும் (5) M/s.MIRIFICAL Careers Private Limited நிறுவனத்தார் தொழில்நுட்ப அவணங்கள் தகுதி பெற்றிருக்கவில்லை என்பதால் அவர்களின் தொழில்நுட்ப ஆவணம் நிராகரிக்கப்பட்டது, மேலும் (6) M/s.Janishree Corporate Services Private Limited தொழில்நுட்ப ஆவணம் மட்டுமே தகுதிபெற்றது.

இதன்படி, 24.09.2021 அன்று நிதி ஆவணம் திறக்க M/s.Janishree Corporate Services Private Limited அவர்கள் அனுமதிக்கப்பட்டது.

**திக.மே.ந.க.எண்.அ7/2518/2021**

இதன்படி, ஒப்ப முன்தகுதி நிபந்தனைகள் பூர்த்தி செய்துள்ள *M/s.Janishree Corporate Services Private Limited* இவர்களின் விலைப்புள்ளி ஒப்பங்கள் *(Price Bid) 24.09.2021* அன்று திறக்கப்பட்டன. *M/s.Janishree Corporate Services Private Limited* அவர்களின் ஒப்பத்தொகை நிர்வாக அனுமதி பெற்ற மதிப்பீட்டு தொகையான ரூ.2,11,65,000/-யை விட (-) 0.11% குறைவு ஆகும். இதன்படி ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத்தொகை (அனைத்து வரிகள் உட்பட) ரூ...2,11,42,560/- (இரண்டு கோடியே பதினோரு லட்சத்து நாற்பத்தி இரண்டாயிரத்து ஐநூற்று அறுபது மட்டும்) விவரம் கீழ்கண்டவாறு.

| வ. எண் | விவரம் | ஒரு நபருக்கு ஒரு மாத ஊதியம் | எண்ணிக்கை | ஒரு மாத ஊதியம் | ஆறு மாத ஊதியம் (அனைத்து வரிகள் உட்பட) |
|---|---|---|---|---|---|
| 1. | பரப்புரையாளர் | 16,375.00 | 200 | 32,75,000 | 1,96,50,000 |
| 2. | மண்டல மேற்பார்வையாளர்கள் | 16,584.00 | 15 | 2,48,760 | 14,92,560 |
| | மொத்தம் | | | | 2,11,42,560 |

28.09.2021 அன்று நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைக்குபின் ஒப்பந்ததாரர் தங்கள் அளித்துள்ள விலை குறைவாகவே அளித்தாகவும், சந்தை விலையின் அடிப்படையில் அளித்துள்ளதாகவும் மேலும், விலை குறைப்பு செய்ய இயலாது எனவும் தெரிவித்து கடிதம் அளித்துள்ளனர். இதன்படி,

| ஒப்பந்ததாரர் பெயர் . திரு/ திருவாளர்கள் | ஒப்பந்ததாரர் அளித்த இறுதி ஒப்பத்தொகை அலுவலக விலைவிவரப்படி 12% GST சேர்த்து | அலுவலக விலைப்பட்டியலின் படி 12% GST சேர்த்து ஒப்பந்தாரரின் ஒப்ப சதவீதம் |
|---|---|---|
| *M/s.Janishree Corporate Services Private Limited* | *Rs. 2,11,42,560/-* | (-) 0.11% குறைவு |

இவ்வொப்பத் தொகையானது நிர்வாக அனுமதி பெற்ற மதிப்பீட்டு தொகை ரூ.2,11,65,000/-யை விட (அனைத்து வரிகள் சேர்த்து) (-) 0.11% குறைவாக உள்ளது.

மேலே குறிப்பிட்டுள்ளவாறு 29.09.2021 அன்று உயர்மட்டகுழு *(HIGH LEVEL COMMITTEE)* கூர்ந்தாய்வு செய்து மேற்கண்ட பணிக்காக (சரக்கு மற்றும் சேவைவரி உட்பட) *Rs. 2,11,42,560/-* க்கு (ரூபாய் இரண்டு கோடியே பதினோரு லட்சத்து நாற்பத்தி இரண்டாயிரத்து ஐநூற்று அறுபது மட்டும்) ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை *M/s.Janishree Corporate Services Private Limited* அவர்களுக்கு வழங்கலாம் என பரிந்துரை செய்துள்ளது.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் குறித்த விழிப்புணர்வு பொதுமக்களிடம் ஏற்படுத்த 200 எண்ணிக்கை பரப்புரையாளர்கள், 15 எண்ணிக்கை மண்டல மேற்பார்வையாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கும் பணிக்கு *M/s.Janishree Corporate Services Private Limited* அவர்களுக்கு (அனைத்து வரிகள் உட்பட) ஒப்பத்தொகை *Rs.2,11,42,560/-* (ரூபாய் இரண்டு கோடியே பதினோரு லட்சத்து நாற்பத்தி இரண்டாயிரத்து ஐநூற்று அறுபது மட்டும்) நிர்வாக அனுமதி பெற்ற தொகையை விட (-) 0.11% குறைவாக பணிகள் அளிக்கவும் மற்றும் ஒப்பத்தை ஏற்று பணி ஆணை வழங்கவும், சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய குறிப்பில்,

<u>தி.க.மே.ந.க.எண்.அ7/2518/2021</u>

**Deputy Commissioner (Revenue & Finance) remarks dated.11.10.2021 as follows:**

**"May be approved for the period from execution of contrat till 15.01.2022 as per the sanction letter."**

முதன்மை செயலர்/ஆணையரது 11.10.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"துணை ஆணையர்(வருவாய் மற்றும் நிதி) அவர்களின் மேற்குறிப்புடன், 15.01.2022 வரை ஒப்பம் வழங்க, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

**********

**<u>பொ.து.ந.க.எண்.ஈ14/4054/2020</u>**

**தீர்மான எண். 796/2021** **நாள்:25-10-2021**

**<u>பணியமைப்பு – பெருநகர சென்னை மாநகராட்சி – பொதுத்துறை - திரு.R.ஜெயக்குமார், துப்புரவு மேஸ்திரி மாற்றுப்பணி துப்புரவு ஆய்வாளர்(பொறுப்பு), கோட்டம்-123, மண்டலம்-9 அவர்கள் - மைலாப்பூர், கிழக்கு அபிராமபுரம் 2வது தெருவில் அதிக அளவில் குப்பைகள் கொட்டப்பட்டு அகற்றப்படாமல் இருப்பதாக "Namma Chennai செயலி" மூலம் பெறப்பட்ட புகார் எண். 816ELBன் மீது நடவடிக்கை எடுக்காத குற்றத்திற்காக தனியர் மீது பெருநகர சென்னை மாநகராட்சி மூன்றாம் மற்றும் நான்காம் நிலைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1983 துணை விதி 9(1)ன் கீழ் காரணம் கேட்கும் குறிப்பாணை வழங்கப்பட்டது – விளக்கம் பெறப்பட்டது - இறுதி ஆணையாக தனியரின் வருடாந்திர ஊதிய உயர்வினை 3 மாத காலத்திற்கு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்து (withhold the increment for a period of 3 months without cumulative effect) ஆணை பிறப்பிக்கப்பட்டது - தனியர் மேல்முறையீடு செய்தது- மேல்முறையீட்டு மனுவின் மீது ஆணை வழங்குதல்.</u>**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-9, கோட்டம்-123ல், மைலாப்பூர், கிழக்கு அபிராமபுரம் 2வது தெருவில் அதிக அளவில் குப்பைகள் கொட்டப்பட்டு அகற்றப்படாமல் இருந்தது தொடர்பாக "Namma Chennai செயலி" மூலம் பெறப்பட்ட புகார் எண்.816ELBன் மீது நடவடிக்கை எடுக்காத குற்றத்திற்காக திரு.R.ஜெயக்குமார், துப்புரவு மேஸ்திரி மாற்றுப்பணி துப்புரவு ஆய்வாளர்(பொறுப்பு), கோட்டம்-123, மண்டலம்-9 அவர்கள் மீது பெருநகர சென்னை மாநகராட்சி வகுப்பு மூன்றாம் மற்றும் நான்காம் நிலைப்பணி (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) 1983ஆம் ஆண்டு துணை விதி 9(1)ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டு, குற்றச்சாட்டு 09.09.2019 நாளிட்ட குறிப்பாணை வழங்கப்பட்டது.

திரு.R.ஜெயக்குமார், துப்புரவு மேஸ்திரி மாற்றுப்பணி துப்புரவு ஆய்வாளர்(பொ.), கோட்டம்-123, மண்டலம்-9 அவர்களின் 23.09.2019 நாளிட்ட விளக்கக்கடிதத்தில், மேற்கண்ட புகார் துப்புரவு ஆய்வாளர்-124 அவர்களின் "நம்ம சென்னை" செயலியில் சென்றது. இப்புகார் கோட்டம்-123 "நம்ம சென்னை" செயலியில் பெறப்படவில்லை எனவும், இச்செயலியில் குப்பைகள் அகற்றப்பட்டதாக தான் பதில் அளிக்கவில்லை, பொய்யான புகைப்படங்களை பதிவு செய்யவும் இல்லை, தன்னை இக்குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்குமாறு கோரியிருந்தார்.

மேற்கூறிய விவரங்களின்படி, திரு.R.ஜெயக்குமார், துப்புரவு மேஸ்திரி மாற்றுப்பணி துப்புரவு ஆய்வாளர்(பொறுப்பு), கோட்டம்-123, மண்டலம்-9 அவர்கள் மீது தொடரப்பட்டுள்ள ஒழுங்கு நடவடிக்கையில் உரிய இறுதி ஆணை வேண்டி துணை ஆணையர்(சுகாதாரம்) அவர்களுக்கு கோப்பு சமர்ப்பிக்கப்பட்டதில், "EDP(SSM) : Please clarify whether this complaint was forwarded in Namma Chennai App to Div.123 C.I. login properly or not? என தெரிவித்துள்ளார்.

இதனை தொடர்ந்து முதுநிலை முறை மேலாளர் (கணிப்பொறி மையம்) அவர்களின் 15.09.2020 நாளிட்ட கடிதத்தின் அடிப்படையில், மேற்கண்ட புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள விலாசமானது (மைலாப்பூர் கிழக்கு அபிராமபுரம் 2வது தெரு) Namma Chennai செயலியில் கோட்டம்-124ல் என குறிப்பிடப்பட்டுளளது. எனவே, மேற்படி புகார் எண். 816 ELB ஆனது கோட்டம்-124னை சார்ந்த துப்புரவு ஆய்வாளர் கைப்பேசிக்கு தகவல் சென்றுள்ளது. கோட்டம்-124னை சார்ந்த சம்மந்தப்பட்ட துப்புரவு ஆய்வாளர் (திரு. மகாதேவன், கைபேசி எண். 9941113639) Login வாயிலாகவே 01.04.2019 நேரம் 12:01PM அன்று " The Garbage has been removed the above area. Hence the complaint closed" என பதிவு செய்யப்பட்டு அதற்கான ஆதாரமாக புகைப்படம் ஒன்று பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது.

திரு.R.ஜெயக்குமார், துப்புரவு மேஸ்திரி மாற்றுப்பணி துப்புரவு ஆய்வாளர்(பொ.), கோட்டம்-123, மண்டலம்-9 அவர்களுக்கு வழங்கப்பட்ட குற்றச்சாட்டுகள் மற்றும் அதன் விளக்கம் பின்வருமாறு.

**<u>குற்றச்சாட்டு 1:</u>**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-9, கோட்டம்-123ல், மைலாப்பூர், கிழக்கு அபிராமபுரம் 2வது தெருவில் அதிக அளவில் குப்பைகள் கொட்டப்பட்டு அகற்றப்படாமல்

இருப்பதாக *"Namma Chennai* செயலி*"* மூலம் பெறப்பட்ட புகார் எண்.816*ELB*ன் மீது நடவடிக்கை எடுக்காமல், மேற்படி புகாரின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு குப்பைகள் அகற்றப்பட்டுவிட்டதாக உண்மைக்கு புறம்பாக பதில் அளித்துள்ளீர்கள்.

**குற்றச்சாட்டு 1ற்கு விளக்கம்**

மேற்படி புகார் துப்புரவு ஆய்வாளர், கோட்டம்-124 அவர்களின் "நம்ம சென்னை" செயலியில் சென்றது. இப்புகார் கோட்டம்-123 "நம்ம சென்னை" செயலியில் பெறப்படவில்லை. எனவே, இச்செயலியில் குப்பைகள் அகற்றப்பட்டுவிட்டதாக நான் பதில் அளிக்கவில்லை. எனவே, இக்குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**குற்றச்சாட்டு 2:**

திரு.ஸ்ரீதர் வெங்கட்டராமன்அவர்கள் *"Namma Chennai* செயலியில்*"* அளித்துள்ள புகார் எண்.816*ELB*ல் மனுதாரர் அளித்துள்ள புகாரின் மீது நடவடிக்கை எடுக்காமல், நடவடிக்கை எடுக்கப்பட்டு குப்பைகள் அகற்றப்பட்டுவிட்டதாக பொய்யான புகைப்படங்களை *"Namma Chennai* செயலியில்*"* பதிவேற்றம் செய்து மனுதாரருக்கு பதில் அனுப்பியது மற்றும் புகார் மனுவினை முடிவு பெற்ற மனுவாக செயலியில் பதிவேற்றம் செய்துள்ளீர்கள்.

**குற்றச்சாட்டு 2ற்கு விளக்கம்**

மேற்படி புகார் துப்புரவு ஆய்வாளர், கோட்டம்-124 அவர்களின் "நம்ம சென்னை" செயலியில் சென்றது. இப்புகார் கோட்டம்-123 "நம்ம சென்னை" செயலியில் பெறப்படவில்லை. எனவே, இச்செயலியில் குப்பைகள் அகற்றப்பட்டு விட்டதாக பொய்யான புகைப்படங்களை நான் பதிவு செய்யவில்லை. எனவே, இக்குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**குற்றச்சாட்டு 3:**

மண்டலம்-9, கோட்டம்-123ன் துப்புரவு ஆய்வாளர் பொறுப்பில் உள்ள தாங்கள் கிழக்கு அபிராமபுரம் 2வது தெருவில் அதிக அளவில் குப்பைகள் கொட்டப்பட்டு அகற்றப்படாமல் இருந்ததை கண்காணிக்க தவறிய செயல்களின் மூலம் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணியின் மீது அக்கறையின்மையும் அலட்சியத்தையும் காட்டுகிறது.

**குற்றச்சாட்டு 3ற்கு விளக்கம்**

அச்சமயம் தேர்தல் பணி செய்ததால் குப்பைகள் அகற்றும் பணியை ஆய்வு செய்ததில் தொய்வு ஏற்பட்டது. அதன் பின் குப்பைகள் அகற்றும் பணியை அன்றாடம் ஆய்வு செய்து குப்பைகள் அகற்றி வருகிறேன். எனவே, இக்குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**குற்றச்சாட்டு 4:**

மேற்கண்ட தங்களின் தவறான செயலின் காரணமாக *"Times of India"* நாளிதழில் செய்தியாக வெளியிடப்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் செயல்பட்டுள்ளீர்கள்.

**குற்றச்சாட்டு 4ற்கு விளக்கம்**

அதன் பின் *"Times of India"* நாளிதழில் வந்த செய்தி எனக்கு தெரிவிக்கப்பட்டவுடன் உடனடியாக நடவடிக்கை எடுத்து குப்பைகள் அகற்றப்பட்டது. எனவே, நான் சென்னை மாநகராட்சி நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தவில்லை. இக்குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இதன் அடிப்படையில் இணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களுக்கு குறிப்பு சமர்ப்பித்ததில், இணை ஆணையர்(சுகாதாரம்) அவர்களின் 13.11.2020 நாளிட்ட செயல்முறை ஆணையில், திரு.*R*.ஜெயக்குமார், துப்புரவு மேஸ்திரி மாற்றுப்பணி துப்புரவு ஆய்வாளர்(பொ.), கோட்டம்-123, மண்டலம்-9 அவர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கையில் தனியர் அளித்துள்ள விளக்கம் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில், Conservancy Inspector (i/c) Thiru. R. Jayakumar has failed to redress the public grievance related to clearance of

garbage in a proper way. Hence, I ordered to withhold the increment for a period of 3 months without cumulative effect as punishment என இறுதி ஆணை வழங்கப்பட்டு, 'ஆட்சேபம்' ஏதும் தெரிவிப்பதாக இருந்தால் சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களுக்கு மேல்முறையீடு செய்யலாம் என தெரிவித்துக்கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையில் தனியர் 29.12.2020 நாளிட்ட மேல்முறையீட்டு மனுவினை சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களுக்கு கீழ்கண்டுள்ளவாறு தனது விளக்கத்தினை சமர்ப்பித்துள்ளார்.

"மேற்கண்ட குற்றச்சாட்டுகள் அனைத்தும் கோட்டம்-124 நம்ம சென்னை செயலில் பெறப்பட்டு (816 ELB) கோட்டம்-124 துப்புரவு ஆய்வாளர் அவர்கள் குப்பைகள் அகற்றப்பட்டு விட்டதாக தகவல் அளித்துள்ளார்கள். மேற்கண்ட குற்றச்சாட்டு கோட்டம்-123ஐ சேர்ந்ததாக இருந்தாலும் கோட்டம்-124 துப்புரவு ஆய்வாளர் செயலியில் சென்றதால் என்னை இக்குற்றச்சாட்டிலிருந்து விடுவித்து எனக்கு வழங்கப்பட்ட தண்டனை 3 மாத ஊதிய உயர்வு நிறுத்தத்தை திரும்ப வழங்கவும், எனக்கு வரவேண்டிய பதவி உயர்வு (துப்புரவு ஆய்வாளர்) எவ்வித தடங்கலும் இன்றி வழங்கவும் பணிவன்புடன் கேட்டுகொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

எனவே, திரு.R.ஜெயக்குமார், துப்புரவு மேஸ்திரி மாற்றுப்பணி துப்புரவு ஆய்வாளர்(பொ.), கோட்டம்-123, மண்டலம்-9 அவர்கள் அளித்துள்ள மேல்முறையீட்டு மனு மீது உரிய நடவடிக்கை எடுக்கும் பொருட்டு சிறப்புஅதிகாரி-மன்றம் அவர்களுக்கு சமர்ப்பித்த, முதன்மைச்செயலர் மற்றும் ஆணையரது 16.08.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"Punishment modified to Censure"என சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் ஆணை அளிக்கப்பட்டது".**

*** * * * * ***

**பதுநகஎண்.D1/SD/WDCN03/0356/2021**

**தீர்மானஎண்.797/2021** **நாள்:25-10-2021**

# தானப்பத்திரம்

மண்டலம்-3, கோட்டம்-24ல் திருவாளர் "Shoban Kumar GPA" for K. Munusamy & K. Rajendran, R. Sampath alias Nandakumar, Miss. S. Bharathi, S. Jagan, S. Karthi, J. Valli, R. Periyasamy, E. Krishnaveni, K. Pachaiammal & "M. Saravanan GPA" for K. Ramachandran, K. Allimuthu, E. Ekathammal, & "E. Munusamy GPA" for C. Ravi, & "N. Dhanpaul GPA" for K. Balu ஆகியோர் சர்வே எண். 197/6C2 சூரப்பட்டு கிராமத்தில் அமைந்துள்ள நிலத்திற்கு மனைஉட்பிரிவு அனுமதி வேண்டி D1/SD/WDCN03/00356/2021நாள்:12.07.2021ன்படி விண்ணப்பம் அளித்துள்ளார்கள்.

அதற்கேற்ப விண்ணப்பதாரர்கள் திருவாளர் "Shoban Kumar GPA" for K. Munusamy & K. Rajendran, R. Sampath alias Nandakumar, Miss. S. Bharathi, S. Jagan, S. Karthi, J. Valli, R. Periyasamy, E. Krishnaveni, K. Pachaiammal & "M. Saravanan GPA" for K. Ramachandran, K. Allimuthu, E. Ekathammal, & "E. Munusamy GPA" for C. Ravi, & "N. Dhanpaul GPA" for K. Balu ஆகியோரிடமிருந்து மனைஉட்பிரிவில் சாலைக்கென ஒதுக்கப்பட்ட நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க சிறப்பு அதிகாரி, மன்றத் தீர்மான எண்.753/2018, நாள்.11.09.2018ன்படி மன்றத் தீர்மானம் பெறப்பட்டு, ஆவணம் எண்.13647/2018 dated 01.10.2018 மூலமாக பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் ஒப்படைக்கப்பட்டு, உதவி பொறியாளர், பகுதி - 44 அவர்களால் நிலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் எடுத்துக் கொள்ளப்பட்டது.

Tamil Nadu Combined Development & Building Rules, 2019ல் மனைப்பிரிவு வேண்டி சமர்ப்பிக்கும் பொழுது மனைப்பிரிவு பரப்பளவில் 0.5% (சாலை பகுதி நீங்கலாக) ஒதுக்கப்பட வேண்டும்.

விண்ணபதாரர் புதிய விதிமுறைக்கு இவ் மனை உட்பிரிவுக்கு ஏற்ப பெருநகர சென்னை மாநகராட்சி பொது பயன்பாட்டிற்கான 5.67 ச.மீ பரப்பளவு நிலம் அளிக்க இசைவு தெரிவித்துள்ளார்.,

எனவே, திருவாளர் "Shoban Kumar GPA" for K. Munusamy & K. Rajendran, R. Sampath alias Nandakumar, Miss. S. Bharathi, S. Jagan, S. Karthi, J. Valli, R. Periyasamy, E. Krishnaveni, K. Pachaiammal & "M. Saravanan GPA" for K. Ramachandran, K. Allimuthu, E. Ekathammal, & "E. Munusamy GPA" for C. Ravi, & "N. Dhanpaul GPA" for K. Balu ஆகியோரிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

எனவே, சர்வே எண். 197/6C2 சூரப்பட்டு கிராமத்தில் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு வேண்டி விண்ணபிக்கப்பட்டுள்ள திட்ட வரைபடத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள 5.67 ச.மீ நிலத்தை மனை உரிமையாளர்கள் திருவாளர் "Shoban Kumar GPA" for K. Munusamy & K. Rajendran, R. Sampath alias Nandakumar, Miss. S. Bharathi, S. Jagan, S. Karthi, J. Valli, R. Periyasamy, E. Krishnaveni, K. Pachaiammal & "M. Saravanan GPA" for K. Ramachandran, K. Allimuthu, E. Ekathammal, & "E. Munusamy GPA" for C. Ravi, & "N. Dhanpaul GPA" for K. Balu ஆகியோரிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி பெற்றுக் கொள்வதற்கு, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய முதன்மைச்செயலர்/ஆணையரது 14.10.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"பெருநகர சென்னை மாநகராட்சி பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலத்தை தானப்பத்திரம் மூலம் பெற்றுக் கொள்ள, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

* * * * * *

**ம.அ7ந.க.எண்.எஸ்3/1363/2021**

**தீர்மான எண். 798/2021** **நாள்:25-10-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-7, அம்பத்தூர், பகுதி-18 விரிவாக்கப்பட்ட பகுதிகளில் தேசிய நகர் புறவாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் பணியமர்த்தப்பட்ட துப்புரவு பணியாளர்களின் பணிக்காலம் 15.10.2021 உடன் முடிவடைவது - அதே 413 எண்ணிக்கை கொண்ட துப்புரவு பணியாளர்களை வைத்து 16.10..2021 முதல் 15.04.2022 வரை 182 நாட்களுக்கு பணியினை மேற்கொள்வதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.3,08,18,060/-க்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் -7, அம்பத்தூர், பகுதி – 18, வார்டு – 79 முதல் வார்டு 83 வரை உள்ள 5 வார்டுகளில் மொத்த பரப்பளவு 16.08 சதுர கி.மீ உள்ளடங்கிய பகுதியாகும். இந்த பகுதியில் 14 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 1638 எண்ணிக்கையில் உட்புற சாலைகளும் பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம்மண்டலத்தின் மக்கள் தொகை 2015 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி 1,,56,255 இருப்பினும், நகரமயமாக்குதலின் முக்கிய பகுதியாக இம்மண்டலம் விளங்குவதால் நாளுக்கு நாள் இம்மண்டலத்தில் மக்கட்தொகை பன்மடங்கு உயர்ந்து வருகிறது.

மண்டலம்-7 அம்பத்தூர் பகுதிகளில் தோராயமாக 335 மெட்ரிக் டன் குப்பைகள் வார்டு-79 முதல் 93 வரையுள்ள 15 வார்டுகளில் தினந்தோறும் துப்புரவு பணியாளர்கள் மூலம் குப்பைகள் சேகரிக்கப்படுகிறது. இப்பணிகளை திறம்பட செய்ய போதிய நிரந்தர துப்புரவு தொழிலாளர்கள் இல்லாத காரணத்தினால் தினக்கூலி அடிப்படையில் தற்காலிக தொழிலாளர்களை நியமித்து அனைத்து வார்டுகளிலும் துப்புரவு பணிகளை மேற்கொள்ள அவசியமாகிறது.

எனவே, தற்போது பகுதி - 18ல் (வார்டு - 79 முதல் 81 - வரை) தற்போது நிரந்தர பணியாளர்கள் இல்லாத காரணத்தாலும், வாகனங்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாத காரணத்தாலும் இன்றைய நிலைகளுக்கு ஏற்ப துப்புரவு பணிகளை திறம்பட மேற்கொள்ள கீழ்க்கண்ட விவரங்களின் அடிப்படையில் பணியாளர்களை நியமித்து பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மைத்துறை மூலம் நியமிக்கப்பட்ட ***Chennai Enviro Solution Private Limited*** **அவர்களுக்கு** ஒப்பம் கோரப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டு மேற்கண்ட நிறுவனம் மூலம் 2 வார்டுகள், 82 & 83 இல் மட்டும் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது, ஆனால் தற்பொழுது கொரோனா நோய் தொற்றின் பரவலை முன்னிட்டு நோய் தடுப்பு மற்றும் போர்க்கால அடிப்படையில் துரிதமாக துப்புரவு பணிகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கு கீழ்கண்ட NULM பணியாளர்களை(16.10..2021 முதல்15.04..2022 வரை) 182 நாட்களுக்கு பணியமர்த்திட ஆணை வேண்டப்படுகிறது.

**பகுதி - 18 ல் NULM திட்டத்தின் கீழ் வார்டு - 79, 80, & 81 இல் மட்டும் பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கை-413.**

மேலும், இப்பகுதி வளர்ந்து வரும் பகுதி மற்றும் மக்கட் தொகை அதிகரித்துள்ளதாலும் அனைத்து தெருக்களிலும் துப்புரவு பணிகளை மேற்கொள்ள அவசியமுள்ளதால் அதற்கேற்ப தற்காலிக பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டியுள்ளது.

சிறப்பு அதிகாரி,மன்ற தீர்மான எண்.599 /2021, நாள்29.07.2021ன்படிதேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) 413 பணியாளர்களை பணியமர்த்தி துப்புரவு பணிகளை மேற்கொள்ள 16.07.2021 முதல் 15.10.2021 வரை 92 நாட்களுக்கு மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டு தற்போது துப்புரவு பணி நடைப்பெற்று வருகிறது. இத்திட்டப் பணியானது 15.10.2021ல் நிறைவடைய உள்ளது. தற்பொழுது *Covid – 19 Pandamic Period* ஆக இருப்பதால் அவசியம் கருதி மண்டலம்-7, பகுதி – 18 ல் NULM திட்டத்தின் மூலம் தொடர்ந்து (16.10..2021 முதல் 15.04..2022 வரை) 182 நாட்களுக்கு செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இக்கருத்துக்களின் அடிப்படையில் வார்டு 79 முதல் 81 வரையில் மூன்று வார்டுகளுக்கு 413 துப்புரவு பணியாளர்கள் துப்புரவு பணியினை மேற்கொள்ள மண்டலம்-7, பகுதி-18 க்கு தேவை என கணக்கிட்டு 16.10.2021 முதல் 15.04.2022 வரையில் 182 நாட்களுக்கு ஆகும் தோராய செலவினம் கீழ்க்காணும் வகையில் கணக்கிடப்பட்டுள்ளது.

**ம.அ7ந.க.எண்.எஸ்3/1363/2021**

| வ.எண் | பகுதி எண் | துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை | தோராய செலவினம் |
|---|---|---|---|
| 1 | 18 | 413 | 413 x 410 x 182 (நாட்கள்) = ரூ .3,08,18,060/- |
| மொத்தம் | | | ரூ. 3,08,18,060/- |

இதனை தொடர்ந்து எதிர்வரும் காலங்களில் பொது சுகாதாரம் சீர்கெடாத வகையில் தற்காலிக துப்புரவு பணியாளர்களை கொண்டு பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும் ஏற்கனவே நடைமுறையில் உள்ள வழி காட்டுதல்களின் அடிப்படையில் மண்டலம் 7ல் மேற்படி பணியினை திறம்பட செயல்படுத்த ஆணையர் அவர்களின் திடக்கழிவு மேலாண்மை துறை சம்மந்தமான 09.09.2020 நாளிட்ட சுற்றறிக்கையின்படி அங்கீகரிக்கப்பட்ட விலைப்படி நாள் ஒன்றுக்கு ரூ.410/- வீதம் 413 பணியாளர்களுக்கு 182 நாட்களுக்கு ஆகும் செலவு ரூ.3,08,18,060/- (ரூபாய் மூன்று கோடியே எட்டு இலட்சத்து பதினெட்டாயிரத்து அறுபது மட்டும்) என 6 மாத காலத்திற்கு கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் -7, பகுதி - 18 ல் தற்பொழுது Covid – 19 Pandamic Period ஆக இருப்பதால் அவசியம் கருதி,

1) 16.10.2021 முதல் 15.04.2022 வரை உள்ள 182 நாட்களுக்கு வார்டு 79 முதல் 81 வரையிலும் ஏனைய 82 மற்றும் 83 வார்டுகளில் Chennai Enviro Solution Private Limited என்கிற நிறுவனம் மூலம் தூய்மை பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் மேற்கண்ட 3 வார்டுகளில் தனியார் நிறுவனம் தூய்மை பணியை செய்ய எடுத்துக்கொள்ளும் (Take Over) நாள் வரை எது முன்னர் வருகிறதோ ( Whichever is earlier) என்ற அடிப்படையில் தற்பொழுது கொரோனா நோய் தொற்றின் பரவலை முன்னிட்டு நோய் தடுப்பு போர்கால அடிப்படையில் துரிதமாக துப்புரவு பணிகளை தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) மூலம் அதே 413 எண்ணிக்கையிலான பணியாளர்களை கொண்டு துப்புரவு பணியை மேற்கொள்ளவும்,
2) மேற்கண்ட 413 தொழிலாளர்களுக்கான குறைந்த பட்ச அடிப்படை ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.410/- வீதம், 182 நாட்களுக்கு ஆகும் செலவு ரூ. 3,08,18,060/- (ரூபாய் மூன்று கோடியே எட்டு இலட்சத்து பதினெட்டாயிரத்து அறுபது மட்டும்) நிர்வாக அனுமதி வேண்டியும்,
3) இப்பணியை கணக்கு குறியீட்டு எண் 40 - 41 - 03 கணக்கு தலைப்பு எண் 210 – 100 - 601 கீழ் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 13.10.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

* * * * * *

**ம.அ7ந.க.எண்.எஸ்2/1104/2021**

**தீர்மான எண். 799/2021** **நாள்:25-10-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-7, அம்பத்தூர், பகுதி – 19 - விரிவாக்கப்பட்ட பகுதிகளில் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் பணியமர்த்தப்பட்ட துப்புரவு பணியாளர்களின் பணிக்காலம் 15.10.2021 உடன் முடிவடைவது - அதே 475 எண்ணிக்கை கொண்ட துப்புரவு பணியாளர்களை வைத்து 16.10.2021 முதல் 15.04.2022 வரை பணியினை மேற்கொள்வதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.3,54,44,500/-க்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் -7, அம்பத்தூர் , பகுதி – 19, வார்டு – 84 முதல் வார்டு – 88 வரை உள்ள 5 வார்டுகளில் மொத்த பரப்பளவு 13.79 சதுர கி.மீ உள்ளடங்கிய பகுதியாகும். இந்த பகுதியில் 5 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 917 எண்ணிக்கையில் உட்புற சாலைகளும் பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம்மண்டலத்தில் பகுதி – 19ன் கீழ் உள்ள 84 முதல் 88 வரையிலான வார்டுகளில் மக்கள் தொகை 2018 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி 1,90,760 இருப்பினும், நகரமயமாக்குதலின் முக்கிய பகுதியாக இம்மண்டலம் விளங்குவதால் நாளுக்கு நாள் இம்மண்டலத்தில் மக்கட்தொகை பன்மடங்கு உயர்ந்து வருகிறது.

மண்டலம் -7. அம்பத்தூர், பகுதி-19ல் 84 முதல் 88 வரையிலான 5 வார்டுகளில் தோராயமாக 94.190 மெ.டன் குப்பைகள் தினந்தோறும் துப்புரவு பணியாளர்கள் மூலம் சேகரிக்கப்படுகிறது. இப்பணிகளை திறம்பட செய்ய போதிய நிரந்தர துப்புரவு தொழிலாளர்கள் இல்லாத காரணத்தினால் தினக்கூலி அடிப்படையில் தற்காலிக தொழிலாளர்களை நியமித்து அனைத்து வார்டுகளிலும் துப்புரவு பணிகளை மேற்கொள்ள அவசியமாகிறது.

எனவே, தற்போது பகுதி – 19ல் (வார்டு – 84 முதல் 88 – வரை) தற்போது உள்ள நிரந்தர பணியாளர்களின் எண்ணிக்கை, வாகனங்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாத காரணத்தால் இன்றைய நிலைகளுக்கு ஏற்ப துப்புரவு பணிகளை திறம்பட மேற்கொள்ள கீழ்க்கண்ட விவரங்களின் அடிப்படையில் பணியாளர்களை நியமித்து பணிகள் மேற்கொள்ளப்படுகிறது, மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மைதுறை மூலம் நியமிக்கப்பட்ட Chennai Enviro Solution Private Limited அவர்களுக்கு ஒப்பம் கோரப்பட்டு பணிஆணை வழங்கப்பட்டு மேற்கண்ட நிறுவனம் மூலம் வார்டு 85 இல் மட்டும் துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது . ஆனால் தற்பொழுது கொரொனா நோய் தொற்றின் மூன்றாவது அலை நோய் பரவலை முன்னிட்டு, நோய் தடுப்பு மற்றும் போர்கால அடிப்படையில் துரிதமாக துப்புரவு பணிகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கு கீழ்கண்ட பணியாளர்களை ஆறு மாத காலத்திற்கு பணியமர்த்திட ஆணை வேண்டப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1) | பகுதி – 19, ல் உள்ள நிரந்தர பணியாளர்களின் எண்ணிக்கை | - | 90 |
| 2) | பகுதி – 19, ல் NULM திட்டத்தின் கீழ் பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கை | - | 475 |
| | மொத்தம் | - | 565 |

வார்டு – 85, 86ல், நிரந்தர துப்புரவு பணியாளர்கள் கடந்த நிதியாண்டில் 30 நபர்கள் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற்றும், 3 நபர்கள் காலஞ்சென்றும் மற்றும் 5 நபர்கள் பதவி உயர்வில் சென்ற நிலையிலும் NULM பணியாளர்கள் கொண்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், இப்பகுதி வளர்ந்து வரும் பகுதி மற்றும் மக்கள் தொகை அதிகரித்துள்ளதாலும் அனைத்து தெருக்களிலும் துப்புரவு பணிகளை மேற்கொள்ள அவசியமுள்ளதால் அதற்கேற்ப தற்காலிக பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டியுள்ளது.

சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண்.600/2021, நாள். 29.07.2021ன்படி தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) கீழ் வார்டு 84,86,87 மற்றும் 88-இல் 475 பணியாளர்களை பணியமர்த்தி துப்புரவு பணிகளை மேற்கொள்ள 16.07.2021 முதல் 15.10.2021 வரை 92 நாட்களுக்கு மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டு தற்போது துப்புரவு பணி நடைப்பெற்று வருகிறது. இத்திட்டப் பணியானது 15.10.2021 – ல் நிறைவடைய உள்ளதால் மண்டலம்-7, பகுதி – 19ல் NULM திட்டத்தின் மூலம் தொடர்ந்து ஆறு மாத காலத்திற்கு செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இக்கருத்துக்களின் அடிப்படையில் 565 துப்புரவு பணியாளர்கள் தேவை என்றாலும், தற்பொழுதுள்ள 90 நிரந்தர துப்புரவு பணியாளர்களை தவிர்த்து மீதமுள்ள 475 எண்ணிக்கை

கொண்ட தற்காலிக துப்புரவு பணியாளர்கள் மண்டலம் -7 பகுதி -19க்கு தேவை என கணக்கிட்டு தற்பொழுது *Covid – 19 Pandemic Period* ஆக உள்ளதால், அவசியம் கருதி 16.10.2021 முதல் 15.04.2022 வரையில் ஆறு மாத காலத்திற்கு ஆகும் தோராய செலவினம் கீழ்க்காணும் வகையில் கணக்கிடப்பட்டுள்ளது.

| வ. எண் | பகுதி எண் | NULM துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை | தோராய செலவினம் |
|---|---|---|---|
| 1 | 19 | 475 | ரூ.410x475x182(நாட்கள்) = ரூ.3,54,44,500/- |
| | | மொத்தம் | ரூ.3,54,44,500/- |

இதனை தொடர்ந்து எதிர்வரும் காலங்களில் பொது சுகாதாரம் சீர் கெடாத வகையில் தற்காலிக துப்புரவு பணியாளர்களை கொண்டு பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், ஏற்கனவே நடைமுறையில் உள்ள வழி காட்டுதல்களின் அடிப்படையில் மண்டலம்-7ல் மேற்படி பணியினை திறம்பட செயல்படுத்த ஆணையர் அவர்களின் திடக்கழிவு மேலாண்மை துறை சம்மந்தமான 19.08.2021 நாளிட்ட சுற்றறிக்கையின் படி அங்கீகரிக்கப்பட்ட விலைப்படி நாள் ஒன்றுக்கு ரூ.410/- வீதம் 475 பணியாளர்களுக்கு ஆறு மாத காலத்திற்கு ஆகும் தோராய செலவு ரூ.3,54,44,500/- (ரூபாய் மூன்று கோடியே ஐம்பத்தி நான்கு இலட்சத்து நாற்பத்தி நான்காயிரத்து ஐநூறு மட்டும்) என கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் -7, பகுதி -19ல் தற்பொழுது *Covid – 19 Pandemic Period* ஆக உள்ளதால், அவசியம் கருதி,

1) பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 7 அம்பத்தூர், பகுதி - 19 ல் 16.10.2021 முதல் 15.04.2022 வரை 6 மாதங்கள் அல்லது *Chennai Enviro Solution Private Limited* என்கிற நிறுவனம் மூலம் மீதமுள்ள 4 வார்டுகளை எடுத்து *(Take Over)* துப்புரவு பணிகளை மேற்கொள்ளும் நாள் வரை எது முன்னர் வருகிறதோ *(Whichever is Earlier)* என்ற அடிப்படையில் தற்பொழுது கொரோனா நோய் தொற்றின் மூன்றாவது அலை நோய் பரவலை முன்னிட்டு நோய் தடுப்பு மற்றும் போர்கால அடிப்படையில் துரிதமாக துப்புரவு பணிகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கு தேசிய நகர்புற வாழ்வாதார இயக்க (NULM) கீழ் அதே 475 எண்ணிக்கையிலான பணியாளர்களை கொண்டு துப்புரவு பணியை மேற்கொள்ளவும்,
2) மேற்கண்ட 475 தொழிலாளர்களுக்கான குறைந்த பட்ச அடிப்படை ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.410/- வீதம், ஆறு மாத காலத்திற்கு ஆகும்தோராய செலவு ரூ.3,54,44,500/- (ரூபாய் மூன்று கோடியே ஐம்பத்தி நான்கு இலட்சத்து நாற்பத்தி நான்காயிரத்து ஐநூறு மட்டும்) நிர்வாக அனுமதி வேண்டியும்,
3) இப்பணியை கணக்கு குறியீட்டு எண் 40- 41-03 கணக்கு தலைப்பு எண் 210 – 10 – 06 – 01 கீழ் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 13.10.2021 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

******

**ம.அ7ந.க.எண்.எஸ்1/1070/2021**

**தீர்மான எண். 800/2021** **நாள்:25-10-2021**

**பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-7, அம்பத்தூர், பகுதி–20 விரிவாக்கப்பட்ட பகுதிகளில் தேசிய நகர் புறவாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் பணியமர்த்தப்பட்ட துப்புரவு பணியாளர்களின் பணிக்காலம் 15..07.2021 உடன் முடிவடைவது - அதே 569 எண்ணிக்கை கொண்ட துப்புரவு பணியாளர்களை வைத்து 16.10..2021 முதல் 15.04..2022 வரை (182 நாட்கள்) பணியினை மேற்கொள்வதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.4,24,58,780/-க்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் -7, அம்பத்தூர், பகுதி – 20, வார்டு – 89 முதல் வார்டு 93 வரை உள்ள 5 வார்டுகளில் மொத்த பரப்பளவு 16.03 சதுர கி.மீ உள்ளடங்கிய பகுதியாகும். இந்த பகுதியில் 26 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 260 எண்ணிக்கையில் உட்புற சாலைகளும் பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம்மண்டலத்தின் மக்கள் தொகை 2015 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி 1,59,4,38 இருப்பினும், நகரமயமாக்குதலின் முக்கிய பகுதியாக இம்மண்டலம் விளங்குவதால் நாளுக்கு நாள் இம்மண்டலத்தில் மக்கட்தொகை பன்மடங்கு உயர்ந்து வருகிறது.

மண்டலம்-7 அம்பத்தூர் பகுதிகளில் தோராயமாக 335 மெட்ரிக் டன் குப்பைகள் வார்டு-79 முதல் 93 வரையுள்ள 15 வார்டுகளில் தினந்தோறும் துப்புரவு பணியாளர்கள் மூலம் குப்பைகள் சேகரிக்கப்படுகிறது. இப்பணிகளை திறம்பட செய்ய போதிய நிரந்தர துப்புரவு தொழிலாளர்கள் இல்லாத காரணத்தினால் தினக்கூலி அடிப்படையில் தற்காலிக தொழிலாளர்களை நியமித்து அனைத்து வார்டுகளிலும் துப்புரவு பணிகளை மேற்கொள்ள அவசியமாகிறது.

எனவே, தற்போது பகுதி – 20ல் (வார்டு – 89 முதல் 93 – வரை) தற்போது நிரந்தர பணியாளர்கள் இல்லாத காரணத்தாலும், வாகனங்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாத காரணத்தாலும் இன்றைய நிலைகளுக்கு ஏற்ப துப்புரவு பணிகளை திறம்பட மேற்கொள்ள கீழ்க்கண்ட விவரங்களின் அடிப்படையில் பணியாளர்களை நியமித்து பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மைத்துறை மூலம் நியமிக்கப்பட்ட ***Chennai Enviro Solution Private Limited*** **அவர்களுக்கு** ஒப்பம் கோரப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டு உள்ளது, ஆனால் தற்பொழுது, கொரோனா நோய் தொற்றின் மூன்றாம் அலை நோய் பரவலை முன்னிட்டு நோய் தடுப்பு மற்றும் போர்கால அடிப்படையில் துரிதமாக துப்புரவு பணிகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கு கீழ்கண்ட NULM பணியாளர்களை 16.10..2021 முதல் 15.04.2022 வரை (182 நாட்களுக்கு) பணியமர்த்திட ஆணை வேண்டப்படுகிறது.

பகுதி **- 20** ல் **NULM** திட்டத்தின் கீழ் பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கை-569.

மேலும், இப்பகுதி வளர்ந்து வரும் பகுதி மற்றும் மக்கட் தொகை அதிகரித்துள்ளதாலும் அனைத்து தெருக்களிலும் துப்புரவு பணிகளை மேற்கொள்ள அவசியமுள்ளதால் அதற்கேற்ப தற்காலிக பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டியுள்ளது.

சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண்.601/2021, நாள். 29.07.2021ன்படி தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) 569 பணியாளர்களை பணியமர்த்தி துப்புரவு பணிகளை மேற்கொள்ள 16.07.2021 முதல் 15.10.2021 வரை மூன்று மாத காலத்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டு தற்போது துப்புரவு பணி நடைப்பெற்று வருகிறது. இத்திட்டப் பணியானது 15.10.2021ல் நிறைவடைய உள்ளது தற்பொழுது covid-19 pandemic period ஆக உள்ளதால், மண்டலம்-7, பகுதி – 20ல் NULM திட்டத்தின் மூலம் தொடர்ந்து 182 நாட்களுக்கு செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இக்கருத்துக்களின் அடிப்படையில் 569 துப்புரவு பணியாளர்கள் துப்புரவு பணியினை மேற்கொள்ள மண்டலம்-7, பகுதி-20க்கு தற்பொழுது covid-19 pandemic period ஆக இருப்பதால், அவசியம் கருதி தேவை என கணக்கிட்டு 16.10.2021 முதல் 15.04.2022 வரையில் (182 நாட்கள்) ஆகும் தோராய செலவினம் கீழ்க்காணும் வகையில் கணக்கிடப்பட்டுள்ளது.

**ம.அ7ந.க.எண்.எஸ்1/1070/2021**

| வ. எண் | பகுதி எண் | துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை | தோராய செலவினம் |
|---|---|---|---|
| 1 | 20 | 569 | ரூ.410 x 569 x 182 (நாட்கள்) = ரூ.4,24,58,780/- |
| | | மொத்தம் | ரூ.4,24,58,780/- |

இதனை தொடர்ந்து எதிர்வரும் காலங்களில் பொது சுகாதாரம் சீர்கெடாத வகையில் தற்காலிக துப்புரவு பணியாளர்களை கொண்டு பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும் ஏற்கனவே நடைமுறையில் உள்ள வழி காட்டுதல்களின் அடிப்படையில் மண்டலம் 7ல் மேற்படி பணியினை திறம்பட செயல்படுத்த ஆணையர் அவர்களின் திடக்கழிவு மேலாண்மை துறை சம்மந்தமான 09.09.2020 நாளிட்ட சுற்றறிக்கையின்படி அங்கீகரிக்கப்பட்ட விலைப்படி நாள் ஒன்றுக்கு ரூ.410/- வீதம் 569 பணியாளர்களுக்கு 16.10.2021 முதல் 15.04..2022 வரை (182 நாட்களுக்கு) ஆகும் செலவு ரூ.4,24,58,780/- (ரூபாய் நான்கு கோடியே இருபத்து நான்கு இலட்சத்து ஐம்பத்தெட்டாயிரத்து ஏழுநூற்றி எண்பது மட்டும்) என ஆறு மாத காலத்திற்கு கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் **-7**, பகுதி **- 20**ல் தற்பொழுது covid – 19 pandemic period ஆக இருப்பதால், அவசியம் கருதி .

